# மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

டாக்டர் கலைமதி

**கடந்த 23-27, ஜூலை 2002 கோலாலம்பூர் சிதிதெல் விடுதியில் ஏழாவது ஆசிய த்ரான்ஸ்கிரிப்ஸன் கருத்தரங்கம் (7th Asian Confrence on Transcription) நடைபெற்றது. கிழக்கு ஆசிய நாட்டில் அதிலும் மலேசியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். இந்த அறிவியல் சம்பந்தப்பட்ட கருத்தரங்கில் நம் நாட்டில் பிறந்து தற்போது அமெரிக்காவில் வாழும் டாக்டர் கலைமதி கலியபெருமாள் இந்த கருத்தரங்கு ஏற்பாட்டு குழுவிற்கு தலைமை ஏற்றிருந்தார். (Florida Universiti Biological Sciences) துணைப் பேராசிரியரான அவரை செம்பருத்தி நேர்காணல் கண்டது.**

- சாதனா



**கே: இந்த கருத்தரங்கின் நோக்கத்தைப் பற்றி சற்று கூறவும்?**

ப: அறிவியலில் 'transcription' பற்றி விவாதிக்கவும் கலந்துரையாடவும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கலந்துரையாடல் புதிய உயிரியல் (moden biology) துறையில் ஆசிய நாடுகளை ஒன்றிணைப்பதே முக்கிய நோக்கமாகும். இதற்கு பாலமாக உலகளாவிய நிலையில் கருத்தரங்கம் ஏற்பாடு செய்து, இதன் மூலம் அறிவியல் துறையில் இளைய அறிவியலாளர்களுக்கு விழிப்புணர்வு கொண்டு வருவதேயாகும். இளைய அறிவியலாளர்கள் மூத்த அறிவியலாளர்களை சந்திக்கவும் கலந்துரையாட இதுவே ஒரு வாய்ப்பாக அமைகிறது. இந்த கருத்தரங்கில் 'transcription' பற்றிய விவரங்களும் இதில் உயிரினங்களான 'prokaryotes' மற்றும் 'eukaryotes' சம்பந்தமான எல்லாச் செய்திகளும் அடங்கியுள்ளன.

நம் உடம்பில் உள்ள அணுக்களை சற்று உள் நோக்கினால் (DNA) மரபணுவிலிருந்து கொண்டுவரும் செய்திகளை நகல் செய்வதுதான் 'transcrip-tion' என்பதாகும்.

இக்கருத்தரங்கு ஆசியா நாடுகளில் ஆங்காங்கே இருக்கும் molecular biologists ஒன்றிணைந்து அறிவியல் தரத்தை மட்டுமல்லாமல் பல விவரங்களை பல தரப்பட்ட ஆசிய நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற வாய்ப்பாக அமைகிறது.

**கே: இக்கருத்தரங்கில் மலேசியாவின் வரவேற்பு எப்படியுள்ளது?**

ப: மலேசியாவின் வரவேற்பு என்று எடுத்துக் கொண்டால் மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும். மலேசியாவில் இத்துறையில் ஆய்வு செய்வது மிகக் குறைவு. இங்கு தாவர சம்பந்தப்பட்ட ஆய்வுகளுக்கு நிறைய வரவேற்பு உண்டு. மலேசியாவில் அடிப்படை ஆய்வு களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அறிவியல் ஆய்வுகள் அடிப்படை ஆய்வு களிலிருந்து செய்வதுதான் நல்லது. அடித்தளம் இல்லாமல் மற்ற ஆய்வுகளை மேற்கொள்வது கடினமாகும். மலேசியாவில் தாவர ஆய்வுகளை மேற்கொள்ள மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். அடிப்படையே இல்லாமல் மிக விரைவில் இந்த தாவர ஆய்வுகளைக் கற்றுக் கொண்டு நாடு திரும்பியவுடன் செயல்படுத்துவதிலேயே மலேசியா குறிக்கோளாக உள்ளது. இதில் வருத்தத்தற்குரியது என்ன வென்றால் அடிப்படையில்லாமல் ஒரு கல்வியைப் படித்து செயல் வடிவம் பெறுவது ஒரு முழுமையான கல்விக்கு அழகல்ல.



**கே: இம்மாநாடு நடத்துவதற்கு காரணம் மற்றும் இதன் தோற்றம் பற்றிய சில விபரங்களைக் கூறவும்?**

ப: கொரியா, தைவான், ஜப்பான் போன்ற நாடுகளில் 'Biology' ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அடிப்படை ஆய்வுகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி தருகின்றனர். அறிவியலின் மகத்துவத்தை அறிந்து அதனை விரிவுப்படுத்தவும் மேம்படுத்தவும் ஆசிய நாடுகள் முக்கியமாக ஜப்பான், கொரியா, தைவான் போன்ற நாடுகள் பல செயல் திட்டங்களை வரையறுத்துள்ளது. இந்த அறிவியல் ஆராய்ச்சிகளில் முழுமையாக ஈடுபட இந்நாடுகள் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கியுள்ளது. உதாரணமாக கொரியாவில் அமைந்துள்ள ஆராய்ச்சி மையம். இந்த மையத்தில் அனைத்து ஆசிய நாடுகளின் அறிவியலாளர்கள் ஒன்று கூடி அறிவியல் ஆராய்ச்சிக்காக பல திட்டங்களை வகுத்துள்ளார்கள். அதன் பிரதிபலிப்புதான் இந்த ஆசிய த்ரான்ஸ்கிரிப்ஸன் மாநாடு. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை இம்மாநாடு அறிவியல் ஆராய்ச்சி துறையை மேம்படுத்த மிக உறுதுணையாக இருக்கும் என்று ஆசிய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அகிரா இசிஹமா மற்றும் சாங் வோன் காங் தலைமை ஏற்று ஒன்றிணைந்து 1989ஆம் ஆண்டு ஓர் அறிவியல் கலந்துரையாடலில் கலந்துப் பேசி இம்மாநாடு திட்டத்தை அமல்படுத்த முடிவு செய்தனர்.

இதன் பிரதிபலிப்பாக ஆறு முறை தாய்வான் (1990), கொரியா (1993), பெங்களூர் (1994), ஜப்பான் (1996), ஆஸ்திரேலியா (1998), சீனா (2000) ஆகிய நாடுகளிலும் தொடர்ந்து ஏழாவது முறையாக மலேசியாவிலும் நடைபெற்றது.

**கே: தங்களின் ஆரம்பக் கல்வி மற்றும் உயர்க் கல்வியைப் பற்றி சில விவரங்கள்?**

ப: ஆரம்பக் கல்வியை ஈப்போவிலுள்ள சுங்கை பாரி தமிழ்ப்பள்ளியில் பயின்றேன். உயர்க் கல்வியை மலாயாப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை மரபணு (பிராணி) துறையில் முடித்தேன். பிறகு எனது முதுகலைப் படிப்பை உயிரியல் துறையில் மேற்கொண்டேன். 1992-ஆம் ஆண்டில் University of Tennes-see, Mumphis, USA-வில் இதே துறையில் டாக்டர் பட்டம் பெற்றேன். Tufts Bostan பள்ளியில் சில காலம் பணியாற்றினேன். இடையில் எனக்குத் திருமணம் நடந்தது. 1995 முதல் 1999 வரை டென்மார்க்கில் பேராசிரியராக பணியாற்றினேன். 1999-ல் எனது சொந்த ஆய்வுக் கூடம் Florida International University-ல் உருவானது. இந்த கூடத்தில் சுமார் 12 மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொள்வர். இம்மாணவர்களில் ஒருவர் மட்டுமே மலேசியாவைச் சேர்ந்தவராவார். இவ்வேளையில் எனது மேற்படிப்பிற்கு உறுதுணையாக இருந்த டாக்டர் கோவி. சுப்ரமணியம், திரு. ராஜன், டாக்டர் சத்தியபாலன், டாக்டர் ராமன், ராஜகோபாலன் இன்னும் பலருக்கு எனது நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

**(குடும்பத்தைப் பற்றி....**

**தமிழ்க்குயில் திரு.க. கலியபெருமாள் மற்றும் திருமதி லோகநாயகி அவர்களுக்கு பிறந்தவர் டாக்டர் கலைமதி. அறுவர் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது மகளாவார். இவருடைய இந்த முன்னேற்றத்திற்கு தன்னுடைய தளராத நம்பிக்கையும் அறிவியல் துறையில் உள்ள ஈடுபாடே காரணம் என்கிறார்.**

**கே: ஒரு பெண்ணாக இருந்தாலும் இந்நிலைக்கு முன்னேறி சமுதாயத்தில் அதிலும் மலேசிய சமூகத்தினரிடையே பெருமைக்குரிய நபராக திகழும் தாங்கள் பெண்களுக்குச் சொல்ல நினைக்கும் கருத்து யாது?**

ப: கல்வி! கல்வி ஒன்றே பெண்களுக்கு வாழ்க்கை திறவுக்கோள். அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கல்வி ஒன்றே உறுதுணை. இந்த சமுதாயத்தில் பெண்களுக்கு சம உரிமை கொடுக்கப்பட வேண்டும். பெண் என்பவள் அடுப்பறைக்கு மட்டுமல்லாமல் எல்லாத் துறைகளிலும் குன்றின் மேலிட்ட விளக்குப் போல காட்சியளிக்க வேண்டும். பெண் விடுதலை வேண்டும். பெண்கள் பாரதி கண்ட புதுமை பெண்ணாக திகழ வேண்டும். இந்த கணினி காலத்திலும் பெண்களை அடிமைப் பிறவியாக நினைப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண்களுக்கு இதுவெல்லாம் தடைகற்கள், அதனை உடைத்தெறிந்து வெளியேற வேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. ●

**நீ நன்றாகப் பேசினாய் எனப் பாராட்டப் பெறுவதை விட, நீ நன்றாகச் செய்தாய் எனப் பாராட்டப் பெறுவது மேல். மண்டியிட்டு நிற்கும் பெரிய மனிதனை விட, நின்று கொண்டு ஏர் உழும் உழவனின் வாழ்க்கை மேல். கடனோடு காலையில் எழுவதை விட, பட்டினியோடு இரவில் படுப்பது மேல்.**

*- பெஞ்சமின் பிராங்கிளின்.*



பக்க அன்பளிப்பு : *ஓர் அன்பர், கோலாலம்பூர்.*